**திருவண்ணாமலை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
பிறப்பிப்பவர்: திருது.கணேஷ்மூர்த்தி, எம்.ஏ., பி.எட்.,
ந.க.எண்.11937 /அ1/2022, நாள்.12.10.2022

**பொருள்:** பள்ளிக்கல்வி - கருணை அடிப்படையில் நியமனம் - 2020-2021 & 2021-2022ம் ஆண்டிற்குரிய காலிப்பணியிட மதிப்பீடு - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடங்கள் நிரப்புதல் - ஆணை வழங்குதல் - சார்ந்து.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (Q1) துறை நாள்: 23.01.2020
2. சம்பந்தப்பட்டவரின் கருத்துரு
3. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக் கல்வித் (SE1(1)) துறை நாள்:09.09.2022.
4. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணைஇயக்குநரின் (பணியாளர் தொகுதி) ந.க.எண். 39671/ஜே/இ4/2021, நாள்:17.09.2022.

......

பார்வையில் காணும் அரசாணைகள், ஆணையரகத்தினால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் பணிநாடுநர்களால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வட்டாட்சியரின் சான்றுகளின் அடிப்படையில் பணிக்காலத்தில் காலமான கீழ்க்குறிப்பிட்டுள்ள அரசு ஊழியரின் வாரிசுதாரருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் கருணை அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பெயர் மற்றும் முகவரி (திரு/திருமதி/செல்வி) | இறந்த அரசு ஊழியரின் பெயர், பதவி (ம) பணிபுரிந்த அலுவலகம் / பள்ளி திரு./திருமதி. | இறந்த தேதி | நியமன ஆணை வழங்கப்படும் அலுவலகம் / பள்ளி |
|---|---|---|---|
| திருமதி.பபுஷ்பலதா, எண்.37, செல்வ விநாயகர் கோயில் தெரு, பெரிய அகரம், செஞ்சி .விழுப்புரம் மாவட்டம். | திரு.பூ.சிவா இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப் பள்ளி, குண்ணக்கம்பூண்டி, திருவண்ணாமலை மாவட்டம். | 10.12.2015 | வட்டாரக் கல்வி அலுவலகம், கீழ்பென்னாத்தூர். திருவண்ணாமலை மாவட்டம். |

நியமனம் பெற்றுள்ள நபர் இந்நியமன ஆணை கிடைக்கப்பெற்ற உடன் பணியில் சேர வேண்டும்.

மேற்கண்டவாறு பணிநியமன ஆணை வழங்கப்பட்டவருக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2017ன்கீழ், அரசாணை (நிலை) எண்.303/நிதி (ஊதியக்குழு)த்துறை நாள்.11.10.2017ன்படி, Level-8, 19500-62000 என்ற ஊதிய தொகுப்பில் அடிப்படை ஊதியம் மற்றும் இதரப்படிகள் ஆகியவை பெறத் தகுதியுடையவராவார்.

நியமனம் பெற்றுள்ள நபர் பணியில் சேரும்போது உதவி மருத்துவ அலுவலரிடமிருந்து உடல்நலத்தகுதி சான்றினைப் பெற்று பணியில் சேர வேண்டும்.

இப்பணியாளர் ஓய்வூதியப் பங்களிப்புத் திட்டத்தின் (Contributory Pension Scheme)கீழ் மட்டும் பணியில் சேரத் தகுதியுடையவராகிறார்.

கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றுள்ள நபரால் பணிவாய்ப்புக்காக முன்னிலைப்படுத்தப்பட்ட கல்விச்சான்று மற்றும் இதர ஆவணங்கள் ஆகியவை உண்மையானவை அல்ல என்றோ அல்லது மதிப்பீடுசெய்ய இயலாதவைஎன்றோ பின்னாளில் கண்டறியப்பட்டால் இந்நியமனமானது எவ்விதமான முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

தனியர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைநூல் தேர்வில்தேர்ச்சி பெறவேண்டும்.

நியமனம் பெற்றுள்ள நபர் பத்தாம்வகுப்பு பொதுத்தேர்வில் தமிழை ஒருபாடமாக பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி இரண்டாம்நிலைமொழித் தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

பணிநியமன ஆணையின்படி அன்னார் பணியில் சேர்ந்ததற்கான பணியேற்பு அறிக்கையினைஉடன் அனுப்பி வைக்குமாறு சார்ந்த அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் நபர்களின் பணியினை விதிகளின்படி, ஓராண்டிற்குள் பணிவரன்முறை செய்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சார்ந்த தலைமையாசிரியர் /வட்டாரக் கல்வி/ மாவட்டக் கல்வி/ மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்விஅலுவலர்,
திருவண்ணாமலை

பெறுநர்:

திருமதி.ப.புஷ்பலதா,

எண்.37, செல்வ விநாயகர் கோயில் தெரு,

பெரிய அகரம், செஞ்சி

.விழுப்புரம் மாவட்டம்.

நகல்கள்:

1. வட்டாரக் கல்வி அலுவலகம்,கீழ்பென்னாத்தூர்.

2. மாவட்டக் கல்வி அலுவலர், (தொடக்கக் கல்வி) திருவண்ணாமலை.

3. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணைஇயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்புகிறேன்.